

# ஈஷா யோகா வெள்ளி விழா

**கோவை, வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஈஷா யோகமையம், தனது ஈஷா யோகப் பயிற்சியின் 25வது வருடத்தைக் கொண்டாடியது. செப்டம்பர் 23ஆம் தேதி ஞாயிறன்று இந்த வெள்ளிவிழா சென்னை அண்ணா பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது**

தன்னையுணர்ந்த ஞானி, சத்குரு ஜக்கி வாசுதேவ், 25 வருடங்களுக்கு முன் 7 பேர்களுக்கு வழங்கிய இந்த ஈஷா யோகா இப்போது 4 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களைச் சென்றடைந்துள்ளது. 120 வகுப்பு மையங்களுடன் இந்தியாவில் மட்டுமல்லாது அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, லெபனன், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற இடங்களிலும் ஈஷா யோகா தற்போது நடைபெறுகின்றது. இந்தப் பயிற்சியின் மூலம் தனக்குள் ஆழமான அமைதியையும், ஆனந்தத்தையும் உணர்ந்த பல்லாயிரக்கணக்கான தன்னார்வத் தொண்டர்கள் ஈஷா அறக்கட்டளையின் மூலம் தற்போது பல சமூகப் பணிகளைச் செய்து வருகின்றனர். கிராமப் புத்துணர்வு, சுற்றுச்சூழல் மேம்பாடு, கிராமப்புறக் கல்வி, எய்ட்ஸ் விழிப்புணர்வு போன்ற பல சேவைகளில் ஈஷா அறக்கட்டளை தீவிரமாக இயங்கி வருகிறது.

இதையொட்டி நடந்த விழாவில் "ஈஷா கிராமோத்சவம்" என்று கிராமியக் கலை, விளையாட்டு மற்றும் உணவுத் திருவிழாவாக மலர்ந்த பல லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் இரண்டரை

கோடி மரக்கன்றுகளை இவ்வருடத்திற்குள் நடும் நோக்கோடு முதல் கன்றும் நடப்பட்டது.

அன்று சென்னைக்கு வந்த சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள், பொதுமக்களுக்குத் தியானம் மற்றும் ஆன்மிக உரை நிகழ்த்தினார். 'ஈஷா காட்டுப்பூ' என்ற மதச்சார்பற்ற ஆன்மிக மாத இதழும் வெளியிடப்பட்டது. அன்று கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் 250க்கும் மேற்பட்ட கிராமிய உணவு வகைகளும் 50க்கும் மேற்பட்ட கிராமிய மற்றும் வேடிக்கை விளையாட்டுகளும் பொதுமக்கள் பங்கு பெற இடம் பெற்றது.

கடந்த 4 வருடங்களாக ஈஷா அறக்கட்டளை 3200க்கும் மேற்பட்ட தமிழக மற்றும் கர்நாடக கிராமங்களில் தனது 'கிராமப் புத்துணர்வு இயக்கத்தின்' மூலம் இலவச மருத்துவம், கல்வி, யோகா போன்ற சேவைகளைச் செய்து வருகின்றது. இதன் அங்கமான கிராம ஒலிம்பிக் எனப்படும் கிராம விளையாட்டுப் போட்டிகளில் 600க்கும் மேற்பட்ட கிராமியக் குழுக்கள் பங்கேற்று, அதன் இறுதிச் சுற்று கிராமோத்சவத்தன்று நடைபெற்றன.

கடந்த 4 வருடங்களாகக் கிராமங்களில் தினமும் நடைபெறும் விளையாட்டுக்களினால் பல்லாயிரக்கணக்கானோர் குடி மற்றும் போதைப் பழக்கங்களிலிருந்தும் பல்வேறு வேறுபாட்டு மனப்பான்மையிலிருந்தும் வெளிவந்திருப்பதால் 50,000க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இவ்விழாவிற்கு வருகை தந்தனர்.

கடந்த வருடம் ஒரே நாளில் 852 லட்சம் மரக்கன்றுகளை நட்டு கின்னஸ் உலகச் சாதனை புரிந்த ஈஷா அறக்கட்டளையின் 'பசுமைக் கரங்கள்' இயக்கத்தில், பொதுமக்கள் தன்னை இணைத்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் இந்நாள் அமைந்தது. அதைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புடன் தொடர்ச்சியாக மரக்கன்றுகள் உருவாக்குவதும், நடுவதும், பராமரிப்பதும் தொடரும். அடுத்த 10 வருடங்களில் 11.4 கோடி மரங்களை நட்டுத் தமிழகத்தின் பசுமைக்குடையை 10% உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தன்னார்வத் தொண்டர்களால் வடிவமைக்கப்பட்டுக் கிராமப்புற வேலை வாய்ப்பைப் பெருக்கும் வகையில் உருவாக்கப்பட்ட





ஆடை, கலைப் பொருட்கள் மற்றும் மரச்சாமான்களின் கண்காட்சியும் இடம் பெற்றது. இப்பொருட்களும் இவ்விழாவும் சுற்றுச் சூழலை மாசுப்படுத்தாத வகையில் நடந்தது குறிப்பிடத்தக்கது. மரக்கன்றுகள் நடுவதற்காக பல கிராமங்களில் செடிகள் வளர்க்கப்படுகின்றன. கீழாம்பூர் கிராமத்தில் திரு.எஸ்.வி.நாராயணன், திரு.சி.கிருஷ்ணன், திருகசமுத்து ஆகியோர் வீடுகளில் மரக்கன்றுகள் வளர்ப்பதை படத்தில் பார்க்கலாம். இது போன்ற ஆர்வமுடையவர்கள் இருக்கும் போது விருட்சங்கள் பூமியில் செழித்தோங்கும். ■